கொள்கிறேன், மன்றத்தினுடைய மரபுகளை, பெருமைகளைக் காப்பாற்றுகிற அளவுக்குச் செய்திகளை வெளியிடுமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: ஆன் எ பாய்ண்ட் ஆஃப் ஆர்டர், சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்று இரண்டு பில்கள்தான் பாஸ் செய்திருக்கிறார்கள். இன்றைக்கு, நேற்றைய இரண்டு பில்களே இருக்கின்றன. இந்த பாயிண்ட் ஆஃப் ஆர்டரை எல்லாம் இழுத்துக் கொண்டு போய், 11 மணிக்கு 12 மணிக்குப் 'பில்'லை எடுத்து, உறுப்பினர்கள் பேசமுடியாமல், பில்லை அவசரஅவசரமாக பாஸ் பண்ண வேண்டிய நிலைமை வருகிறது. நான் காலையிலே, கேள்வி நேரத்தை விட்டுவிட்டு, பில்லை எடுத்துக் கொள்ளலாம் என்று கூட நினைத்தேன். அப்படியிருக்கும்போது தேவையில்லாமல், பாய்ண்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பி நேரத்தை எடுத்துக் கொள்ளாதீர்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, பாய்ண்ட் ஆஃப் ஆர்டருக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும். அப்படியில்லையென்று சொன்னால், தாங்கள் அனுமதிக்காமலிருக்கலாம். மற்ற எல்லோருக்கும் பாய்ண்ட் ஆஃப் ஆர்டர் எழுப்ப அனுமதி கொடுக்கிறீர்கள். நாங்கள் பாய்ண்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பக் கூடாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பொன்னப்ப நாடார் எழுப்பியது பற்றி, பாய்ண்ட் ஆஃப் ஆர்டர் மறுக்கப்படவில்லை. எவ்வளவு கேட்டாலும் நான் வாய்ப்பு கொடுக்கிறேன். இது எங்கெங்கோ போகிறதே என்றுதான் மறுக்கிறேன்.

(இ) பஞ்சாப் மாநில முதல்வர், தமிழக முதல்வர் வட எல்லையை வந்து பார்க்க அழைப்பு விடுத்திருப்பது குறித்து.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, சில நாட்களுக்கு முன்பு மொரார்ஜி தேசாய் அவர்கள்—(குறுக்கீடு) இது ரொம்ப முக்கியமான விஷயம். கொஞ்சம் சொல்வதைக் கேளுங்கள்—இரண்டு பிரச்னைகளுக்காக உண்ணாவிரதம் இருந்தார்கள். ஒன்று குஜராத்—அதை விட்டுவிடுவோம். இன்னொன்று, இந்த நாட்டிலே இருக்கிற அவசரச் சட்டத்தை உடனே ரத்து செய்ய வேண்டுமென்ற ஒரு முக்கியமான கோரிக்கையைக்கூட வைத்து உண்ணாவிரதம் இருந்தார்கள். ஒரு விதத்திலே சமரசம் ஏற்பட்டிருக்கிறது. இந்த அவசரச் சட்டத்தைப் பொறுத்த மட்டில் பிரதம அமைச்சரவர்களும், எதிர்க்கட்சிகளும் கலந்து ஆலோசித்து அதற்கு ஒரு முடிவு செய்யலாம் என்று அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள்.

இதற்கிடையிலே, பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த முதலமைச்சர், நமது மாநிலத்தைச் சேர்ந்த முதலமைச்சர் வட எல்லையை வந்துப் பார்க்கவேண்டும், இந்த அவசரச் சட்டம் நீடிக்க வேண்டுமா, வேண்டாமா என்பதனை அதற்குப் பிறகு முடிவு செய்யலாம் என்று மாண்புமிகு முதலமைச்சரவர்களை அழைத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்கும் அந்த மாநில முதலமைச்சருக்கும் நெருங்கிய உறவு இருக்கலாம். அதனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவசரச் சட்டம் தேவையா, இல்லையா என்கிற பெரிய பிரச்னையைத் தீர்க்க வழி வகுக்கும். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்ற விவரத்தைத் தெரிவித்தால் நன்றாக இருக்கும்.

திரு. பெ. சீனிவாசன்: இந்த முதலமைச்சரைப் பற்றி அந்த முதலமைச்சர் சொன்ன சொற்கள் கூடச் சரியாக இல்லை. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அதற்கும் சரியான பதிலைத் தந்தால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நான் எப்போதுமே இங்கு சரியான பதிலைத்தான் தந்து வருகிறேன். நண்பர் ஜேம்ஸ் அவர்கள் பஞ்சாப் மாநில முதலமைச்சர்தான் எனக்கு நெருங்கிய நண்பர் என்று சொன்னார். எல்லா மாநில முதலமைச்சர்களுமே எனக்கு நெருங்கிய நண்பர்கள்தான். இவர் மாத்திரம் நண்பர் என்று கருதத் தேவையில்லை. பஞ்சாப் மாநில முதலமைச்சரவர்கள் என்னை அழைத்திருப்பதாக வந்த செய்தியைப் பத்திரிகையில்தான் பார்த்தேன். அவரிடமிருந்து அப்படி எனக்குக் கடிதம் வருமானால் நான் அங்கு சென்று, பார்த்து, ''அவசர நிலைமை'' நீடிக்கலாமா, வேண்டாமா என்ற கருத்தைச் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன். அந்த அளவுக்கு என்னைப் பெருமைப் படுத்தி, அவர்கள் அழைப்பு விடுத்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

எல்லையோரப் பகுதிகள் பாதுகாக்கப் படவேண்டுமென்பதற்காக அவசரகாலச் சட்டம் நீடிக்கப்பட வேண்டுமென்பது உண்மையாக இருக்குமானால், அவசர நிலைமை எந்தெந்த பகுதிகளுக்குத் தேவையோ, அந்தப் பகுதிகளுக்கு மாத்திரம் அவசரகாலச் சட்டத்தை வைத்துக்கொள்ள ஏற்பாடு செய்வது பற்றி சிந்திக்கலாம். அதற்காக, இந்தியா முழுமைக்கும் அவசரகாலச் சட்டம் தேவையில்லையென்பதுதான் நம்முடைய கருத்தாகும்.